DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE KANYAKUMARI
AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 312/2023
Prosecution Witness -P.W. 16

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர். பெஞ்சமின் ஜெபராஜ் |
| Father's Name | : | தேவராஜன் |
| Village | : | ஆசாாிபள்ளம் |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Caste | : | நாடார் |
| Calling | : | மருத்துவர் |
| Religion | : | கிறிஸ்தவர் |
| Age | : | 39 |
| Date | : | 20.11.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.11.2024.

(1, 3 மற்றும் 4 ஆம் எதிாிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர். 2 எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

<u>20.11.2024</u>

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் கன்னியாகுமரி அரசு மருத்துவகல்லூரி சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் போதகராாக பணிபுாிந்து வருகிறேன். கடந்த 10.06.2023 அன்று பணியில் இருக்கும்போது ஆரல்வாய்மொழி காவல் நிலைய குற்ற எண்.145/2023

வழக்கில் இறந்து போன ஏசுதாசன் என்ற 57 வயதுடைய ஆண் பிரேதத்தின் பிரேத பாிசோதனைக்கான காவல் ஆய்வாளரின் விண்ணப்பத்தினை பெற்றேன். பிரேத பாிசோதனை மாலை 4.00 மணிக்கு ஆரம்பித்து, 5.00 மணிக்கு முடிக்கப்பட்டது. பிரேத விரய்ப்புத்தன்மை உடல் முழுவதும் இருந்தது. கை, கால், விரல் நகங்கள் வெளிறி இருந்தன. பிரேத பாிசோதனையின்போது கீழ்கண்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள்காணப்பட்டன.

1. 3 x 1 செ.மீ. வயிற்றி அறை ஆழமுள்ள குத்தியக்காயம், வலது பக்க நெஞ்சு கீழ்பகுதியில் காணப்பட்டது. அதை பாிசோதித்தபோது அது 7 வது விலா எலும்பின் முன்பக்கம், கல்லீரலில் வலது பக்கம் மற்றும் வலது சிறுநீரகம் ஆகியவற்றில் குத்தி இருந்தது.

2. 4 x 1 செ.மீ. வயிற்று அறை ஆழமுள்ள குத்தியக்காயம், நடு வயிற்றின் மேல் பக்கம், 1 வது காயத்திலிருந்து 5 செ.மீ. உள் பக்கமாக காணப்பட்டது. அதை பாிசோதித்தபோது அது பெருங்குடலும், சிறுகுடலும் சேரும் இடத்திலிருந்து 25 செ.மீ. தொலைவில் பெருங்குடலை குத்தி இருந்தது.

3. 4 x 1 செ.மீ. வயிற்று அறை ஆழமுள்ள குத்தியக்காயம், இடது பக்க வயிற்றின் முன்பக்கம் காணப்பட்டது. அதை பாிசோதித்தபோது இடது சிறுநீரகத்தை குத்தி இருந்தது.

4. 4 x 1 x 7 செ.மீ. ஆழமுள்ள குத்திக்காயம், ஆணுறுப்பிற்கு சற்று மேலே வயிற்றின் கீழ் பகுதியில் காணப்பட்டது. அதை பாிசோதித்தபோது அந்த காயம் கீழ் நோக்கி தசைகளுக்கு உள்ளே சென்றிருந்தது.

மேற்கூறிய காயங்கள் சிவந்த நிறத்தில் இருந்தன.

வயிற்றை திறந்து பாிசோதித்தபோது, வயிற்று அறையில் 2 லிட்டர் இரத்தம், இரத்தக்கட்டுகளுடன் காணப்பட்டது. இரு சிறுநீரகங்களை சுற்றி இரத்தக்கட்டு காணப்பட்டது. வயிற்றில் 50 கிராம் பாதியும், முழுவதுமான சமைத்த அாிசி, புளித்த வாடையுடன் இருந்தது. மற்ற உடல் உறுப்புகள் வெளிறி இருந்தன.

இருதயத்தின் இடது கீழ் அறையில் பெருத்திருந்தது. இரத்த நாளங்கள் சாதாரணமாக இருந்தன. இடது நுரையீரல் நெஞ்சு சுவற்றுடன் ஒட்டி இருந்தது. நாவடி எலும்பு சாதாரணமாக இருந்தது. மண்ணீரல் சுருங்கியும், வெளிறியும் இருந்தது. சிறுநீரகங்கள் மேற்பரப்பு பூச்சு கடித்தது போன்று பார்வைக்கு தொிந்தது. சிறுகுடலில் 30 ML கூழ் போன்ற திரவம், புளித்த வாடையுடன் இருந்தது. சிறுநீர் பை காலியாக இருந்தது. மூளை சாதாரணமாகவும், வெளிறியும் காணப்பட்டது. இது குறித்து நான் ஒரு பிரேத பாிசோதனை அறிக்கை கொடுத்தேன். உடல் உறுப்புகள் இராசாயன பாிசோதனைக்காக சேகரிக்கப்பட்டு, திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு பெறப்பட்ட அறிக்கையில் அவற்றில் விசம் எதுவும் இல்லை என கண்டறியப்பட்டது. இறந்த நபர் அவருக்கு ஏற்பட்ட பல குத்துக்காயங்களால் இறந்திருக்க கூடும் என்று இறுதி கருத்துரை வழங்கினேன். ஆய்வாளரிடமிருந்து பெற்ற வேண்டுகோள் கடிதத்தை தாக்கல் செய்கிறேன். அது அ.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் அளித்த பிரேத பாிசோதனை அறிக்கை என்னிடம் காட்டப்படுவதுதான். அது அ.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் திருநெல்வேலி தடய அறிவியல்

ஆய்வகத்திலிருந்து பெற்ற உடல் உள்ளுறுப்புகள் குறித்தான பகுப்பாய்வு அறிக்கை. அது அ.சா.ஆ. 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் கொடுத்த இறுதியறிக்கை. அது அ.சா.ஆ. 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் சா.பொ. 1 கத்தியால் மேற்சொன்ன 4 காயங்களும் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாாித்தார்.

**குறுக்கு விசாரணை (1வது எதிரி தரப்பில்) :-**

வயிற்றில் சமைத்த அாிசிதான் இருந்தது என்றால் சரிதான். அதனால் அதை அவர் இறப்பதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு தான் சாப்பிட்டிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. இரண்டு மணி நேரத்திற்குள் சாப்பிட்டிருக்கலாம். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் அவர் இறப்பதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பு சாப்பிட்டிருந்தால்தான் அாிசி நான் சொல்வது போல உடலில் இருந்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. புளித்த வாடை என்பது மது அருந்தியிருந்தாலும் வரலாம் என்றால் வரலாம். நான் வழங்கிய பிரேத பாிசோதனை அறிக்கை உதரவிதாணம் சேதமானதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். அது வலது கல்லீரலுடன் ஒட்டிதான் இருக்கும், வலது கல்லீரலை குத்தியுள்ளபோது, உதரவிதாணத்திலும் குத்தியிருக்கும். எனக்கு பிரேத பாிசோதனை செய்வதில் எவ்வளவு காலம் அனுபவம் உள்ளது என்றால் 7 வருடகாலம் அனுபவம் உள்ளது. குத்தியிருக்கும் என்பது அனுமானம் என்றால் சரிதான். அந்த காயம் அந்த திசையில்தான் சென்றுள்ளது, அதை வைத்து அவ்வாறு அனுமானிக்கிறேன். என்னுடைய அறிக்கையில் அந்த காயத்தின் திசையை குறித்துள்ளேனா என்றால்

இல்லை. ஆனால் 7 வது விலா எலும்புக்கு கீழே கல்லீரல் அதற்கு கீழே சிறுநீரகம் ஆகியவை உள்ளது. அந்த காயம் கீழ் நோக்கிய திசையில் இருந்ததை வைத்து அவ்வாறு சொல்கிறேன். கீழ்நோக்கி முதல் காயம் இருந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. போலீசார் கேட்டுக்கொண்டதின் பேரில் ஒன்றாவது காயத்தில் மார்பின் கீழ் பகுதி என்று குறிப்பிட்டு, என்னுடைய பிரேத பா ிசோதனையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கல்லீரல் உடலின் வலது பக்கத்தில் வெளிப்புறத்தில் தடிமனாகவும், வயிற்றை நோக்கி வர வர தடிமன் குறைந்தும் இருக்கும். கல்லீரலின் கீழ்பகுதி சிறுநீரகங்களை தொட்டு இருக்குமா என்றால் தொட்டு இருக்காது. நெருக்கமாக இருக்கும். நெஞ்சு எலும்பில் (Sternum) எந்த காயமும் இல்லை என்றால் சரிதான். நெஞ்சு எலும்பின் இறுதி பகுதி நெஞ்சு கூட்டின் முடிவு என்றால் சரிதான். என்னுடைய பிரேத பா ிசோதனை அறிக்கையின் படி மார்பு கூட்டில் (Thoracic Cavity) ல் எந்த காயமும் இல்லை என்றால் சரியல்ல. முதல் காயத்தில் 7 வது விலா எலும்பில் குத்தி காயம் இருப்பதாக சொல்லியுள்ளேன். குறிப்பிட்டு மார்பு கூட்டில் காயம் இருந்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சா.பொ. 1 ஆயுதத்தை என்னிடம் ஆய்வாளர் காண்பித்து விசாா ித்தாரா என்றால் இல்லை. எந்த தேதியில் என்னை ஆய்வாளர் விசாா ித்தார் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. காயத்தின் நீளம் சாதாரணமாக ஆயுதத்தில் அகலத்துடன் ஒத்து இருக்கும் என்றால் சரிதான். காயத்தின் அகலம் ஆயுதத்தின் தடிமனுடன் ஒத்து இருக்கும் என்றால் சரிதான். ஆனால் கொஞ்சம் கூடுதல், குறைவாக இருக்கும். காயங்களின் ஓரங்கள் அனைத்தும் சீராக இருந்ததா என்றால் ஆமாம்.

காயம் ஏற்பட்ட பிறகு காயம் விரிவடைந்ததாக தெரியவந்ததா என்றால் அவ்வாறு நான் என்னுடைய அறிக்கையில் குறிக்கவில்லை. காயங்களின் இரு முனைகளும் சீராக இருந்ததா என்றால் ஆமாம். பொதுவாக ஆயுதத்தின் ஒரு பக்கம் சீராகவும், மற்றொரு பக்கம் மழுங்கியும் இருந்தால் அதனால் ஏற்பட்ட காயத்தின் ஒரு புறம் மட்டும் சீராகவும், மறுபுறம் சிறிது சிதைந்தும் காணப்படும் என்றால் சரிதான். ஆனால் அது போன்ற எல்லா காயங்களும் அப்படி இருக்க வேண்டும் என அவசியம் இல்லை. Incised என்றால் வெட்டுக்காயம் என்றாலும் Punctured என்றால் துளைத்த காயம் என்றாலும் சரிதான். நான் சொல்லியிருப்பது நான் பார்த்த காயம் கூர்மையான ஆயுதத்தால் ஏற்பட்ட துளைத்த காயம் என்பதை Incised, Punctured என சொல்லியிருக்கிறேன். நான் பிரேத பரிசோதனை செய்தபோது பிரேதத்திலிருந்து இரசாயன பரிசோதனைக்கு அனுப்புவதற்காக இரத்த மாதிரி எடுத்தேனா என்றால் எடுத்துள்ளேன். அந்த இரத்த மாதிரியை எங்கள் மருத்துவமனையிலேயே பரிசோதனை செய்தேனா அல்லது இரசாயன பரிசோதனைக்காக தடய அறிவியல் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டதா என்றால் இரத்த மாதிரி எடுத்தேன். நான் அளித்த பிரேத பரிசோதனை அறிக்கையில் அவ்வாறு குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். சாதரணமாக அது சொல்வது இல்லை. அவருக்கு என்ன என்ன சிகிச்சை அளிக்கப்பட்டது, என்ன மருந்து கொடுக்கப்பட்டது, மது அருந்தியிருந்தாரா போன்றவை அவருடைய இரத்தத்தை பரிசோதித்தால் தெரிய வரும் என்றால் அது எனக்கு தெரியாது. போலிசார் அறிவுரையின்பேரில்தான் நான் காயங்களை என்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் ஒரு தலைபட்சமாக

போலீசார் கேட்டுக்கொண்டதின் பேரில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் தகவல்அறிக்கையில் மார்பு பகுதி காயம் என குறிப்பிட்டிருந்ததால் என்னையும் அதே போல அறிக்கை கொடுக்க சொல்லி நான் அதற்கு ஏற்றவாறு மார்பின் கீழ் பகுதி என புதிய ஒரு உடல் பகுதியை சொல்லி, அறிக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிரேத பாிசோதனை அறிக்கை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (2, 3 மற்றும் 4 ஆம் எதிரிகள் தரப்பில்) :-</u>**

2, 3 மற்றும் 4 வது எதிாிகள் மேலே சொன்ன குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.